# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1882/5 - 2014 සැප්තැම්බර් මස 30 වැනි අඟහරුවාදා - 2014.09.30

*1882/5 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டம்***

*அரசியலமைப்புச் சட்டத்தின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் துணை உறுப்புரை மற்றும் 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க சட்டத்தினாலும், 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1969 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவுடனும் அந்தச் சட்டத்தின் 6 ஆம் பிரிவுடனும் 14 ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய அந்தச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*சனாதிபதி.*

*கொழும்பு,*
*2014, செத்தெம்பர் 30.*

*ஒழுங்குவிதிகள்*

*1. 2007 ஆம் ஆண்டின் ஒற்றோபர் மாதம் 08 ஆந் திகதிய 1518/4 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள இறக்குமதி மற்றும் ஏற்றுமதி அனுமதிப்பத்திரக் கட்டணம் இதன் மூலம் தொடர்ந்தும் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.*

*2. இந்தத் திருத்தமானது 2014 ஆம் ஆண்டின் ஒற்றோபர் மாதம் முதலாம் (01) ஆந் திகதி முதல் செயல்வலுப்பெறும்.*

| *விடயம்* | *அனுமதிப்பத்திரக் கட்டணம்* |
|---|---|
| *பெற்றோலிய உற்பத்தியின் கீழ் பெற்றோல், டீசல் மண்ணெண்ணெய் மற்றும் ஆகாய விமானத்திற்கான எண்ணெய்* | *- பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இந்திய எண்ணெய்க் கம்பனி ஆகியவற்றுக்கு வருடாந்த அனுமதிப்பத்திரத்திற்காக 1,000,000 ரூபா*<br>*- ஏனைய நிறுவனங்களுக்காக 0. 2% (செலவு, காப்புறுதி மற்றும் கப்பற் செலவுப் பெறுமதியில்)* |
| *தார்* | *- 10,000 மெற்றிக் தொன்களுக்காக 10,000 ரூபா* |

*10- 861*